## வகுப்பு - 7 - பருவம் - 3 - குடிமையியல்

### 2. ஊடகமும் ஜனநாயகமும்

36. கூற்று: அச்சு ஊடகம் மக்களின் பல்கலைக்கழகம் எனக் கருதப்படுகிறது

காரணம்: பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதிலும் கல்வி அறிவு ஊட்டுவதிலும் பெரும்பங்கு வகிக்கிறது மற்றும் பொதுமக்களின் பாதுகாவலனாகவும் செயல்படுகிறது

(1) கூற்று தவறு, காரணம் சரியான விளக்கம்

(2) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல

(3) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

(4) கூற்றும் மற்றும் காரணம் இரண்டும் தவறு

37. கூற்று: தொலைபேசி ஒரு ஊடகம் ஆகும்.

காரணம்: ஒரு நபர் மற்றொருவருடன் தனியாகவோ குழுவாகவோ தொடர்பு கொள்ளலாம்

(1) கூற்று தவறு காரணம் சரி (2) கூற்று சரி, காரணம் தவறு

(3) கூற்று, காரணம் இரண்டும் சரி (4) கூற்று, காரணம் இரண்டும் தவறு

38. கீழே உள்ளவற்றில் தவறானது எது?

(1) கிராஸ் என்பது மக்களை குறிக்கிறது

(2) தொடர்பு கொள்ளும் முறை ஊடகம்

(3) ஊடகம் தேசிய மற்றும் உலக செய்தியை அளிக்கிறது

(4) ஊடகம் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது

39. கீழ்க்காணும் நிகழ்வுகளை காலங்களின் அடிப்படையில் வரிசைப்படுத்துக.

1. ஆகாசவானி தனது ஒலிபரப்பைத் தொடங்கியது.

2. இந்திய அரசு வானொலி நிறுவனம் தொடங்கப்பட்டது.

3. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது

(1) 1, 2, 3 (2) 2, 3, 1 (3) 3, 1, 2 (4) 3, 2, 1

LIVEWORKSHEETS

40. ஆகாசவாணி தனது ஒளிபரப்பைத் தொடங்கிய ஆண்டு ______.

(1) 1973 (2) 1935 (3) 1937 (4) 1956

41. கீழ்க்கண்டவற்றுள் சரியான இணை / இணைகளைத் தேர்ந்தெடுக்கவும்

(i) வலைப்பதிவு - இணைய வகை ஊடகம்

(ii) திரைப்படம் - தனிமனித தொடர்பு ஊடகம்

(iii) செய்தித்தாள் - வெகுஜன தொடர்பு ஊடகம்

(1) i மற்றும் ii (2) i மற்றும் iii

(3) மேற்கண்ட அனைத்தும் (4) மேற்கண்ட ஏதுமில்லை

42. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணை / இணைகளைத் தேர்ந்தெடுக்கவும்.

(i) சமூக ஊடகம் - கீச்சகம்

(ii) புத்தகம் - அச்சு ஊடகம்

(iii) கருத்தரங்கு - குறுகிய தொடர்பு ஊடகம்

(1) i மட்டும் (2) ii மற்றும் iii

(3) i, ii மற்றும் iii (4) மேற்கண்ட ஏதுமில்லை

43. கீழே உள்ளவற்றில் தவறானது எது?

(1) "மீடியம்" (Medium) என்பது - கிரேக்கச் சொல் - இதன் பொருள் "ஊடகம்"

(2) டெமோஸ்" (Demos) என்பது - கிரேக்க சொல் - இதன் பொருள் "மக்கள்"

(3) "க்ராடோஸ்" (Crates) என்பது - கிரேக்க சொல் - இதன் பொருள் "ஆட்சி (அ) அதிகாரம்"

(4) "டெமோகிரேசி" (Democracy) என்பது - கிரேக்க சொல் - இதன் பொருள் "ஜனநாயகம்"

44. கீழ்கண்டவற்றை பொருத்துக.

(i) ஹரி கதைகள் - a. மின்னஞ்சல்

(ii) தனிமனித தொடர்பு - b. கருத்தரங்கம்

(iii) வெகுஜன தொடர்பு - c. சமயக் கதைகள்

LIVEWORKSHEETS

(iv) குறுகிய தொடர்பு ஊடகம் - d. தொலைக்காட்சி

(1) (i) - c (ii) - a (iii) - d (iv) - b (2) (i) - a (ii) - c (iii) - b (iv) - d

(3) (i) - c (ii) - b (iii) - a (iv) - d (4) (i) - d (ii) - c (iii) - b (iv) - a

45. தவறான விடையைத் தேர்ந்தெடு.

(1) ஊடகம் மக்களாட்சியில் தலையிடுவதில்லை.

(2) ஊடகம் தேசிய மற்றும் உலக செய்திகளை அனுப்புவதாகும்.

(3) ஊடகம் என்பது ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் மக்களின் நலனுக்காக செயல்படுவதாகும்.

(4) ஊடகம் கிராமப்புற மக்களுக்குக் கல்வி அளிக்கிறது.

46. சமூக ஊடகத்தினை குறிப்பது ______.

(1) வலைப்பதிவுகள் (2) தொலைக்காட்சி

(3) முகநூல் (4) செய்தித்தாள்

47. ஊடகங்களின் முக்கியப் பணி ______.

(1) மக்களிடையே பொதுவான கருத்தினை ஏற்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

(2) பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் வழங்குதல்

(3) பொருள் ஈட்ட வழி செய்தல்

(4) எதிர் கருத்துக்களை விதைத்தல்

48. ஜனநாயகத்தின் கோட்பாடு என்பது ______.

(1) முடியாட்சிக் கோட்பாடு (2) மக்களால் ஆட்சி செய்யப்படுதல்

(3) ஏகாதிபத்தியம் (4) சிலருக்கு முக்கியத்துவம்

49. ஜனநாயகத்தின் நான்காவது தூணாக கருதப்படுவது ______.

(1) செயலாட்சிக்குழு (2) நீதித்துறை (3) சட்டமன்றம் (4) ஊடகம்

50. கூற்று: ஜனநாயக அரசின் நான்காவது தூண் ஊடகம் ஆகும்.

காரணம்: ஊடகம் மற்ற மூன்று துறை (சட்டமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறை) செயல்பாடுகளின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்கிறது.

(1) கூற்று சரி, காரணம் தவறு

(2) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல

(3) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

(4) கூற்றும் மற்றும் காரணம் இரண்டும் தவறு

LIVEWORKSHEETS